முகத்துவாரத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். அந்தப் பகுதியிலே 896 கண்ணாடி நாரிழைப் படகுகள் (FRP Boat), 131 நாட்டுப் படகுகள் மற்றும் 6 விசைப் படகுகள் மட்டுமே இருக்கின்றன. ரூபாய் 18 கோடியே 91 இலட்சம் செலவிலே 3 மீன் ஏலக் கூடங்கள், வலை பின்னும் கூடம், வலை இருப்புக் கூடம், கழிவறை மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளிலே மீன்கள் உள்ளூர் தேவைக்கே போதுமானதாக இல்லை. ஆக, உள்ளூர் தேவைக்குப் போக, மீன்கள் மீதம் இருக்கும்பட்சத்தில், கடலூர் மாவட்டத்தில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கங்கணங்குப்பத்தில் தனியார் பங்களிப்போடு அமைக்கப்படவிருக்கின்ற Fish Processing Park-ஐ பயன்படுத்திக்கொள்ளலாம். கடலூர் மாவட்டத்தில் மீன் பதனிடும் பூங்கா அமைக்கப்படுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, எல்லா நிலையிலும் தயார் நிலையில் உள்ளது. ஆக, ஒப்பந்ததாரர்கள் கோரப்பட்டிருக்கின்றார்கள். அந்த ஒப்பந்ததாரர்கள் அமர்த்தப்பட்ட பின்னரே, அந்தப் பணி துவங்கப்பட்டு, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

14—

வருவாய் ஆய்வாளர் அலுவலகம்

***5794— திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, பன்னந்தூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தை ஆளுகிற ஆற்றல் பெற்றிருக்கின்ற, தமிழினம் காப்பதற்காக இப்பூவுலகிலே

அவதரித்திருக்கின்ற, தமிழர் குல சாமி புரட்சித் தலைவி இதய தெய்வம் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டத்தில், பாரூர் உள்வட்டம், பாரூர் கிராமத்தில் இயங்கி வருகின்றது. பாரூர் உள்வட்டத்தில் பன்னந்தூர் கிராமம் உள்பட 10 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. ஏற்கெனவே, பாரூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் இயங்கி வருகின்றது. பாரூர் உள்வட்டத்திற்கான கிராம மக்கள் பாரூரில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சிரமம் ஏதுமின்றி சென்று வருவதால், பன்னந்தூரில் புதிதாக வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அமைப்பதற்கான அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றென்றும் நன்றியுணர்வோடும், நம்பிக்கை உறுதியோடும் உலக மக்களின் உள்ளங்களிலும், அவர்கள்தம் இல்லங்களிலும் சிம்மாசனம் போட்டு கம்பீரமாக அமர்ந்திருக்கும் மக்களின் முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தொழுது, வணங்குகின்றேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பன்னந்தூர் கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற பன்னந்தூர், பாப்பாரப்பட்டி, வாடமங்கலம், குடிமேனஅள்ளி மற்றும் தட்ரஅள்ளி போன்ற ஊராட்சிகளிலே இருந்து தொலைதூரத்தில் உள்ள பாரூர் நகரத்திற்கு வந்து செல்வது சிரமமென அந்தப் பகுதி மக்கள் கருதுகிறார்கள். அப்பகுதியிலே வாழ்கிற மக்கள் வருவாய்த் துறை சம்பந்தமாக பல சான்றிதழ்கள் பெறுவதற்கும், பல உதவிகளைப் பெறுவதற்கும் நீண்டதூரம் உள்ள பாரூர் கிராமத்திற்கு நடந்தே வருகின்றார்கள் என்பதை மனதில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்று,

அந்தப் பகுதிவாழ் மக்களுடைய நலன் கருதி, அவசியம் அங்கே ஒரு வருவாய் குறுவட்டம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரூர் உள்வட்டத்தில் பன்னந்தூர் கிராமம் உள்பட 10 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. பன்னந்தூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அமைந்தால் கோட்டப்பெட்டி, பென்ரஅள்ளி மற்றும் கீழக்குப்பம் ஆகிய கிராமங்கள் பன்னந்தூரிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துவிடும். மேற்படி கிராம மக்கள் தென்பெண்ணை ஆற்றினைக் கடந்து செல்ல நேரிடும். இதனால் இக்கிராம மக்கள் பன்னந்தூர் சென்றுவர நேரம் மற்றும் பணம் விரயம் ஏற்படும். மேலும், பாரூர் உள்வட்டத்திற்கான கிராம மக்கள் பாரூரில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சிரமம் ஏதுமின்றி சென்று வருவதால் பர்கூர் தொகுதி, பன்னந்தூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.*

முற்பகல் 11-25

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையில் உதித்ததை, வருவாய் வட்டாட்சியர் தலைமையிலே ஏறத்தாழ 16,670 வருவாய் கிராமங்களுக்கு வட்டாட்சியர் அலுவலகத்தைக் கொண்டு சென்று அம்மா திட்ட முகாம் நடத்தி ஒரு மாபெரும் சாதனையைப் படைத்தவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்ததே அம்மா திட்ட முகாம். இந்த நாட்டிலே எத்தனையோ மக்கள் குறை தீர்க்கின்ற முகாம்கள் நடைபெறுகின்றன. ஆனால் இந்தியத் திருநாட்டிலேயே 33 இலட்சம் மக்கள் பங்கேற்று, அவர்களுக்கு தீர்வு காணப்பட்டிருக்கிற ஒரே முகாம் அம்மா திட்ட முகாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன். இங்கே மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் தொடர்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். இங்கே 10 வருவாய் கிராமங்கள்தான் இருக்கின்றன. 15 வருவாய் கிராமங்கள் வரையிலே ஒரு வருவாய் உள்வட்டம் இருக்கின்ற காரணத்தினாலே, வருகின்ற காலத்திலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நலன் கருதி, மக்களின் முதல்வர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர் வரும் காலங்களில் அப்படி ஒரு வருவாய் குறுவட்டம் அமைத்துத் தருவதற்குப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த* **மாண்புமிகு** *அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

மேம்படுத்துதல்

***6230— திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், துடியலூர் அரம்ப சுகாதார நிலையத்தினை